**தலவாக்கலை – லிந்துல நகர சபை**
**நுவரஎலிய மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தலவாக்கலை – லிந்துல நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் 03 கணக்கு மீதிகளின் பெறுமதி அக்கணக்கு மீதிகளுக்குரிய துணை பதிவேடுகளுடன் ஒப்பிடும் போது ரூபா 397,324 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டு முதல் 14 ஆண்டுகள் வரையான காலவீச்சிற்குரிய நிர்மாணக் கடன்பட்டோர் மீதி ரூபா 2,084,114 ஆக இருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டு முதல் 06 ஆண்டுகள் வரையான கால வீச்சிற்குரிய செலுத்த வேண்டிய 05 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,080,012 ஆக இருந்தது.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 10,151,824 ஆன 05 கணக்கு விடயங்கள் மற்றும் 02 நாட்குறிப்பு பதிவுகள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

#### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

2002 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சபைக்கு கிடைத்து மதிப்பிழந்த ரூபா 517,900 பெறுமதியான 08 காசோலைகள் தொடர்பாக

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணமம் 189 மற்றும் 486 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,777,807 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 9,486,670 ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) சபையின் நடைமுறைக் கணக்கொன்றில் மீளாய்வாண்டில் ஒவ்வொரு மாத இறுதியிலும் ஆகக் குறைந்தது ரூபா 6,500,000 தொகை தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தை பொருத்தமான வகையில் ஆக்கபூர்வமாக பயன்படுத்தவோ அல்லது முதலீடோ செய்திருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்க கூற்றில் தீர்வையாகாத பெறுவனவுகளாக 1993 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் ரூபா 410,726 மீதியை தீர்வு செய்திருக்கவில்லை.

.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 4,808,551 ஆன நிலுவை வீதவரி, கடை வாடகை, வீட்டு வாடகை மற்றும் நில வாடகை நிலுவையில் ஆண்டின் இறுதிவரையிலும் ரூபா 2,072,048 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் நிலுவை வருமான அறவீடு திருப்திகரமான நிலமையில் காணப்படவில்லை.

#### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 854,826 தொகையும் காணி பரிமாற்றல் முத்திரைக் கட்டணங்களாக ரூபா 303,500 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.4 மிகை அறவீடு

நகர சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்புக்கள் தொடர்பாக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 25,500 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொதுப் வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் மக்களுக்கு கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக பகிர்ந்தளிப்பதற்கு 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 100 கழிவுப்பொருள் தொட்டிகளில் ரூபா 87,274 பெறுமதியான 23 குப்பை தொட்டிகள் மீளாய்வாண்டின் இறுதி வரை பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக நகர சபை அறிந்துகொள்ளாததன் காரணமாக அது தொடர்பில் எந்தவொரு செயற்பாடும் மீளாய்வாண்டில் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

(அ) சபைக்கு சொந்தமான பொது வியாபாரச் சந்தையின் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 20 கடைகளின் குத்தகை உடன்படிக்கைகளினதும் இரண்டு நபர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 03 காணித் துண்டுகளுக்குரிய குத்தகை ஒப்பந்தங்களினதும் செல்லுபடிக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் புதிய உடன்படிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் கடைகள் முன்னைய ஆண்டுகளில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 04 குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 294,896 ஆன நிலுவை வாடகையை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குரிய மாடு கொல்லுமிடத்தில் கழிவுப்பொருட்களை முறையாக வெளியேற்றுவதற்காக உரிய தரத்திலான உறிஞ்சுக் கொள்ளக்கூடிய குழிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக மாடுகள் கொல்லுமிடத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தையும் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஈ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருந்த பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்டிருந்த ரூபா 111,556 பெறுமதியான 697 நூலகப் புத்தகங்களின் பற்றாக்குறை தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

(அ) ஊழியர் வெற்றிடங்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 09 பதவிகளில் காணப்பட்ட 23 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் கடன்

சபையில் சேவை புரிந்து 2012 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற சுகாதார தொழிலாளர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 88,737 ஆன கடன்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு திறமையின்மை**

(அ) 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் வீதிவரி அறவீட்டுக்காக ஆதனங்களின்

மதிப்பீடு 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 மார்ச் 17 ஆந் திகதிய மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் மப/உ.ம.ஆ/2016/03 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் கடைகளின் வாடகை 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான பொது சந்தையில் அமைந்துள்ள 30 கடைகளுக்காக 2007 இல் மதிப்பிடப்பட்ட வாடகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.5 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

---

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தி மேல்கொத்மலை நீர் மின் செயற்திட்டத்திற்காக கையேற்கப்பட்ட காணியில் 2015 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 1,752,818 பெறுமதியான மிடல்டன் சுற்றுலா ஹோட்டல் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 216,000 இற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் காணியின் உரித்து தொடர்பான சிக்கல்கள் காரணமாக குத்தகையாளர் தொடர்ச்சியாக வியாபாரத்தை நடாத்திச் செல்லாமல் இருந்ததுடன் ரூபா 52,696 மாத்திரம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3.6 விளைவற்ற சொத்துக்கள்**

---

(அ) 2014 ஆம் ஆண்டின் போது மாகாண எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதிஏற்பாட்டினைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 2,174,909 பெறுமதியான மிடல்டன் உணவு விற்பனை நிலைய கட்டிடம் எவ்வித பயன்பாட்டிற்காக பயன்படுத்தாமல் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தை அண்மித்து படகு சேவையொன்றை நடாத்திச் செல்வதற்காக மத்திய மாகாண சுற்றுலா அமைச்சின் நிதிஏற்பாட்டை பயன்படுத்தி 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 761,900 பெறுமதியான மோட்டார் படகு என்ஜினொன்று, பைபர் மோட்டார் படகு ஒன்று மற்றும் 02 பைபர் படகு என்பன விளைவற்ற வகையில் சபை வளவில் வைக்கப்பட்டிருந்தன.

(இ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தி மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 1,484,256 பெறுமதியான கூற்றில் பொருள் சுழற்சி பொருள் கொள்வனவு நிலைய கட்டிடம் எவ்வித செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்கள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் இணக்கஞ் செய்யும் போது 05 வருமான விடயங்களில் 18 சதவீதம் முதல் 140 சதவீதம் வரையும் 08 செலவின விடயங்களில் 11 சதவீதம் முதல் 184 சதவீதம் வரையும் விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| வருமான நிர்வாகம் | நிலுவை வருமானங்கள் அறவிடப்படாமை. |
| கடன்பட்டோர்/ கடன் கொடுத்தோர் | பழைய கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| ஊழியர் முகாமைத்துவம் | ஊழியர் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாமை. |
| சொத்துக்கள் | உயர் இயலளவில் பயன்படுத்தாமை |